Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
College House


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 168 | உள்ளூர் - 17.06.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 168 | வெளியூர் - 18.06.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


‘நவபஞ்சம ராஜ யோகம்’ இவர்களுக்கு மங்கள பலன்கள்!

அரசு ஊழியர்களுக்கு 24 மாத சம்பளம்?

அதிமுக எம்எல்ஏ சி.விஜயபாஸ்கர் தலைமையில்?

புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!

## பிரதமர் மோடி, டிரம்ப் முக்கிய ஆலோசனை!



இவியான், ஜூன். 17–

ஜி7 உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக, மேற்காசிய சூழல், ஹார்மூஸ் நீரிணை, அமெரிக்காவிடம் இருந்து எரிபொருள் இறக்குமதி உள்ளிட்டவை பற்றி பிரதமர் மோடியும், டிரம்ப்பும் இன்று ஆலோசனை மேற்கொள்வார்கள் என தகவல் தெரிவிக்கின்றது. எரிசக்தி துறையில் இந்தியாவும், அமெரிக்காவும் நீண்டகால உறவில் இருந்து வருகின்றன. வர்த்தக ஒப்பந்தம் அதன் இறுதி கட்டத்தில் உள்ளது. இன்னும் சில வாரங்களில் அதற்கான பணிகள் நிறைவடையும் என வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று, ஜி7 உச்சி மாநாட்டு தலைவர்கள் முன்னிலையில் பேசிய பிரதமர் மோடி, அமெரிக்க ராணுவ தாக்குதலில் இந்தியாவை சேர்ந்த கப்பல் ஊழியர்கள் 3 பேர் உள்பட பலர் பலியான சம்பவம் பற்றி குறிப்பிட்டு பேசினார். அப்போது அந்த கூட்டத்தில் டிரம்ப்பும் அமர்ந்து இருந்தது கவனிக்கத்தக்கது.

## செபி முடிவுக்கு சந்தை காத்திருப்பு!

# ஜூன் 19-ல் முதலீட்டின் திசை மாறுமா? முக்கிய சீர்திருத்தங்களுக்கு பச்சைக்கொடியா?

## முதலீட்டாளர்கள் எதிர்பார்ப்பில்!




புதுடெல்லி, ஜூன். 17–

இந்தியப் பங்குச் சந்தை ஒழுங்குமுறை வாரியமான செபி (SEBI), பல்வேறு முக்கிய சீர்திருத்தங்கள் குறித்து ஆலோசிக்க ஜூன் 19 அன்று கூடுகிறது.

பங்குகளைத் திரும்பப் பெறுதல் (Buybacks), மியூச்சுவல் ஃபண்ட் பணப்புழக்கம் மற்றும் திட்டங்களுக்கு விரைவான அனுமதி வழங்குவது போன்ற முக்கிய அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட உள்ளது.

சந்தையின் செயல்பாட்டை மேம்படுத்தவும், சில்லறை முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கவும் இந்த விதிகள் எளிமையாக்கப்பட உள்ளதால், முதலீட்டாளர்கள் இந்த முடிவுகளை உன்னிப்பாகக் கவனிப்பது அவசியம். பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் தங்கள் பங்குகளைத் திரும்பப் பெறும் (Share Buy–back) முறையில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவதே இந்தக் கூட்டத்தின் முதன்மை நோக்கமாக உள்ளது. இனி திறந்த சந்தை (Open–market) முறைக்கு பதிலாக, டெண்டர் ஆஃபர் (Tender offer) முறைக்கு முன்னுரிமை அளிக்க செபி திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் சமமான வாய்ப்பு கிடைப்பதோடு, பங்கு விலையில் முறைகேடுகள் நடப்பதையும் தடுக்க முடியும். செபி கூட்டத்தின் முடிவுகள் உங்கள் முதலீட்டை எப்படி பாதிக்கும்? சந்தையில் அதிக ஏற்ற இறக்கம் நிலவும் காலங்களில், மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களில் ஏற்படும் பண நெருக்கடியைச் சமாளிக்க புதிய விதிகள் கொண்டு வரப்பட உள்ளன.

இதற்காக கடன் வாங்கும் விதிமுறைகளைச் சீரமைக்க செபி திட்டமிட்டுள்ளது. அதேபோல், ஆல்டர்நேட்டிவ் இன்வெஸ்ட்மென்ட் ஃபண்டுகளுக்கு (AIF) விரைவாக அனுமதி வழங்குவதன் மூலம், புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஃபண்ட் மேலாளர்கள் உடனுக்குடன் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்படும். முக்கிய அம்சம் முக்கிய மாற்றம் பங்குகளைத் திரும்பப் பெறுதல் (Buy–backs) டெண்டர் ஆஃபருக்கு முன்னுரிமை பணப்புழக்கம் (Liquidity) கடன் விதிமுறைகளில் மாற்றம் அனுமதிகள் (Approvals) AIF–களுக்கு விரைவான அனுமதி கடன் பத்திர முதலீட்டாளர்களுக்கான வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க, பாண்ட் பிளாட்ஃபார்ம் (Bond plat–form) சீர்திருத்தங்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

மேலும், ஏப்ரல் 2026 முதல் அமலுக்கு வரவுள்ள புதிய வரி மாற்றங்கள் குறித்தும் விவாதிக்கப்பட வாய்ப்புள்ளது. புதிய விதிகள் அமலுக்கு வரும் முன்பே முதலீட்டாளர்கள் தங்கள் போர்ட்ஃபோலியோவைச் சரியாகத் திட்டமிட இந்த அப்டேட்கள் உதவும். நவீன நிதிச் சந்தையை உருவாக்குவதில் இந்தச் சீர்திருத்தங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் இந்த ஆண்டின் எஞ்சிய காலத்திற்கான வர்த்தகச் சூழலைத் தீர்மானிக்கும். முதலீட்டாளர்களும் ஃபண்ட் மேலாளர்களும் புதிய விதிமுறைகள் மற்றும் விரைவான காலக்கெடுவுக்குத் தயாராக இருக்க வேண்டும். இந்திய மூலதனச் சந்தையில் ஏற்படும் இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வது உங்கள் முதலீட்டுப் பயணத்திற்குப் பெரிதும் உதவும். கூட்டத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளுக்காகக் காத்திருங்கள்.

## சபாநாயகர் தலைமையில் 17 பேர் கொண்ட அலுவல் ஆய்வுக்குழு அறிவிப்பு!



சென்னை, ஜூன். 17–

த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டம் தொடங்குகிறது. காலை 10 மணிக்கு தொடங்கும் இந்த கூட்டத்தில் கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் உரையாற்றுகிறார். காலை 10 மணிக்கு சபாநாயகர் இருக்கைக்கு வரும் அவர், தனது உரையை ஆங்கிலத்தில் தொடங்குகிறார். இந்த உரை சுமார் 1 மணி நேரம் இடம்பெறும் என்று தெரிகிறது.

அதன்பின்னர், கவர்னர் அர்லேகரின் உரையை, வலதுபுற இருக்கையில் அமர்ந்திருக்கும் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தமிழில் வாசிப்பார். இடதுபுற இருக்கையில் கவர்னரின் முதன்மை செயலாளர் ஷஜன் சிங் சவான் அமர்ந்திருப்பார். கூட்டம் முடிந்ததும் அனைத்து உறுப்பினர்களிடமும் விடைபெற்று கவர்னர் அர்லேகர் புறப்பட்டு செல்வார்.

அதன்பின்னர், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு செய்வதற்காக, அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் நடைபெறும். சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், கூட்டத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது முடிவு செய்யப்படும். அனேகமாக 3 அல்லது 4 நாட்கள் சட்டசபை கூட்டம் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் 17–வது சட்டமன்ற பேரவையின் அலுவல் ஆய்வுக் குழுவில் யார், யார் இடம்பெற்றுள்ளது என்பது தொடர்பான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

**பட்டியலின் முழு விவரம்:–**

**தலைவர்**

1. ஜே.சி.டி. பிரபாகர், பேரவைத் தலைவர்.

**உறுப்பினர்கள்**

2. ச. ஜோசப் விஜய், முதல்–அமைச்சர்.
3. N. ஆனந்த், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர்.
4. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய் & பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர்.
5. ரா. நிர்மல் குமார், எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர்.
6. செ. ராஜேஷ் குமார், சுற்றுலாத்துறை அமைச்சர்.
7. வன்னி அரசு, சமூக நீதித்துறை அமைச்சர்.
8. ரா. சபரிநாதன், அரசுத் தலைமைக் கொறடா
9. உதயநிதி ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர்.
10. ஏ வா வேலு
11. சிவசங்கர்
12. எடப்பாடி K. பழனிசாமி
13. ஓ.எஸ். மணியன்
14. முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி
15. ஆர். செல்லசுவாமி
16. இராமச்சந்திரன்
17. SSB. சையது பாரூக் பாஷா

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரி அமைச்சரவை விரிவாக்கம்: 3 அமைச்சர்கள் பதவியேற்பு!



புதுச்சேரி, ஜூன். 17–


புதுச்சேரி சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது.

முதல்–அமைச்சராக ரங்கசாமி கடந்த மாதம் 13–ந்தேதி பதவியேற்றார். அவருடன் அமைச்சர்களாக நமச்சிவா யம், மல்லாடி கிருஷ்ணாராவ் ஆகியோர் பதவியேற்றனர்.

இந்த நிலையில் முதல்–அமைச்சர் ரங்கசாமி கடந்த 3–ந்தேதி கவர்னர் கைலாஷ்நாதனை சந்தித்து பேசினார். அப்போது புதிய அமைச்சர்களாக என்.ஆர்.காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ராஜவேலு, சிவக்கொழுந்து, பாஜகவைச் சேர்ந்த ஜி.என்.எஸ். ராஜசேகரன் ஆகிய 3 பேரை பரிந்துரை செய்து கடிதம் வழங்கினார். இதனை தொடர்ந்து புதிய அமைச்சர்களாக 3 பேரை நியமிக்க ஜனாதிபதி ஒப்புதல் அளித்தார்.

இந்த நிலையில் புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழா இன்று நடைபெற்றது. இந்த விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன் கலந்து கொண்டு அமைச்சர்கள் ராஜவேலு, சிவக்கொழுந்து, ஜி.என்.எஸ். ராஜசேகரன் ஆகியோருக்கு பதவி பிரமாணம் மற்றும் ரகசிய காப்பு பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த விழாவில் முதல்–அமைச்சர் ரங்கசாமி, அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், அமைச்சர்களுக்கு இன்னும் ஓரிரு நாட்களில் இலாகா ஒதுக்கப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் (Cognizant Technology Solutions) நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் வாரியர், Board Member for India மற்றும் சட்ட ஆலோசகர் டி. நாராயணன், Corporate Affairs for India, Head கௌரவ் ஹஸ்ரா, நிறுவனத்திற்கான தமிழ்நாடு தலைவர் அர்ச்சனா ராம்குமார், Government Affairs for State, Head கே. புருஷோத்தமன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், நாஸ்காம் (NASSCOM) நிறுவனத்தின் தலைவர் ராஜேஷ் நம்பியார், துணைத் தலைவர் ஸ்ரீகாந்த் சீனிவாசன், இயக்குநர் உதய சங்கர், தென் மண்டல இயக்குநர் பாஸ்கர் குமார் வர்மா ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.




தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 17.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 03-ம் தேதி

# விவசாயிகளின் பயிர் கடன்கள் தள்ளுபடி!! ஆனா ஒரு டிவிஸ்ட்..!!





தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த சட்டமன்ற தேர்தலில் தவெக வெற்றி பெற்றது. காங்கிரஸ், இடதுசாரிகள் , விசிக உள்ளிட்ட கட்சிகளின் கூட்டணியோடு தவெக ஆட்சி அமைத்தது. முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்று கொண்டார். விஜய் முதலமைச்சரானது முதலே கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர்க்கடன் பெற்ற விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி தொடர்பான அறிவிப்பை எப்போது வெளியிடுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

இந்நிலையில் கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர்க்கடன் பெற்ற விவசாயிகளுக்கு தலா ரூ.50,000 வரை பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படுமென சில வாரங்களுக்கு முன்பு முதலமைச்சர் விஜய் அறிவித்து இருந்தார். ஆனால் இதற்கு விவாசாயிகள் மற்றும் அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. முதலமைச்சர் விஜய் விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டுமென வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையில், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற ரூ.75,000 வரையிலான பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும், ரூ.75,000க்கு மேல் பயிர்க்கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.35,000 வரை தள்ளுபடி செய்யப்படும் என்றும் முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் கடந்த 25.05.2026 தேதியில் ரூ.50,000/– வரை பயிர் கடன் பெற்ற குறு, சிறு விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்து அறிவிப்பு வெளியிடார். மாநிலம் முழுவதிலுமிருந்து இவ்விவசாய கடன் தள்ளுபடி குறித்து மறுபரிசீலனை செய்ய பல்வேறு தரப்புகளிலிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன என குறிப்பிட்டுள்ளனர். மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்ய முதலமைச்சர் விஜய் உத்திரவிட்டதற்கு இணங்க, மேற்கண்ட பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தினை மறு ஆய்வு செய்திட 15.06.2026 அன்று தலைமைச் செயலகத்தில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இம்மறு ஆய்வுக் கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் தலைமையில் விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக, வேளாண்மை – உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களுடன் மறு பரிசீலனை செய்யப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியின் 28.11.2025 ஆம் தேதியிட்ட அரசு கடன் தள்ளுபடி திட்டங்களுக்கான மாதிரி செயல்பாட்டு நடைமுறைகளின்படி, பயிர்க்கடன் தள்ளுபடிக்கான முழுத்தொகையையும் அரசானது 45 முதல் 60 நாட்களுக்குள் முழுமையாக செலுத்தவேண்டும் என்ற வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு அரசின் இன்றைய நிதிநிலை மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், கூட்டுறவு வங்கிகளில் 01.05.2025 முதல் 28.02.2026 வரை பயிர் கடன் பெற்ற 14.43 இலட்சம் விவசாயிகளுக்கு சுமார் ரூ.6,000 கோடி வரை கீழ்க்கண்டவாறு தள்ளுபடி செய்ய முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடன் தொகை ரூபாயில் குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிக்கான தள்ளுபடி ரூ. 75,000 வரை கடன் தொகை முழுவதும் (100%) ரூ.75,000 க்கு மேல் கடன் தொகை எனில் ரூ. 35,000 தள்ளுபடி. இதன்மூலம் கடந்த நிதியாண்டில் பயிர்க்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் அதிகபட்சமாக ரூ.75,000, குறைந்தபட்சமாக ரூ.35,000 பணப்பயன் கிடைக்கும். இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடி, எதிர்வரும் சாகுபடி பருவத்திற்கு கடன் பெற விரும்பும் விவசாயிகளுக்கு பெருமளவில் பயன்தரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. * 8,33,773 குறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.3,599.67 கோடி * 5,16,183 சிறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.1,995.42 கோடி * 93,548 இதர பெரு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.337.15 கோடி என கூடுதல் 14,43,504 விவசாயிகளுக்கு உத்தேச பயிர் கடன் தள்ளுபடி தொகை ரூ.5,932.23 கோடி ஆகும்.

இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் 01.05.2025 முதல் 28.02.2026 வரை கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றுள்ள 14,43,504 விவசாயிகள் பயனடைவார்கள். இதனால் அரசுக்கு ரூ.5,932.23 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# தங்கம் விலை மேலும் குறைவு...!



சென்னை, ஜூன். 17–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,12,240–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கிராமுக்கு ரூ.30 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,030–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையை பொறுத்த வரையில் இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.275–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 75 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# கடன் ரூ.13.18 லட்சம் கோடி: மீண்டு எழுமா தமிழகம்..?




சென்னை, ஜூன். 17–

தமிழகத்தில் நடைபெற்ற 17–வது சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று த.வெ.க. ஆட்சி அமைத்துள்ள நிலையில், அக்கட்சியின் தலைவர் ஜோசப் விஜய் கடந்த மாதம் (மே) 10–ந் தேதி முதல்–அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார். விழா மேடையில் அவர் பேசும்போது,

தமிழ்நாட்டின் கடன் சுமை ரூ.10 லட்சம் கோடியை கடந்திருப்பதா கவும், நிதி நிலை தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியி டப்படும் என்றும் அறிவித்தார். ஆட்சி அமைத்து 36 நாட்கள் கடந்த நிலையில், நேற்று மாலை திடீரென வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது.

**வெள்ளை அறிக்கையில் அதிர்ச்சி தகவல்**

தமிழக மக்கள் அனைவரும் மாநிலத்தின் மொத்த கடன் ரூ.10 லட்சம் கோடியாக இருக்கும் என்று எதிர்பார்த்த நிலையில், எல்லோரும் அதிர்ச்சி அடையும் வகையில் ரூ.13 லட்சத்து 18 ஆயிரம் கோடியாக கடன் அளவு உயர்ந்து நிற்பது வெள்ளை அறிக்கை மூலம் வெளி வந்தது. கடந்த 60 ஆண்டு களில் வாங்கிய கடன் ரூ.5 லட்சம் கோடியாக இருக்க, கடந்த 5 கால தி.மு.க. ஆட்சியில் மேலும் ரூ.5 லட்சம் கோடி கடன் வாங்கப்ப ட்டுள்ளது. அதாவது, ஒவ்வொரு ஆண்டும் கடன் மட்டும் ரூ.1 லட்சம் கோடி வாங்கப்பட்டுள்ளது.

**ஒவ்வொருவர் தலையிலும் ரூ.1.28 லட்சம் கடன்**

தமிழகத்தின் வருவாய் பற்றாக்குறை ரூ.46,538 கோடியில் இருந்து ரூ.78,324 கோடியாக அதிகரித்துள்ளது. தமிழக மக்கள் ஒவ்வொருவர் தலைக்கும் ரூ.1 லட்சத்து 28 ஆயிரத்து 934 கடன் உள்ளது. இன்று பிறக்கும் குழந்தையை கூட இந்த கடன் சுமை விட்டுவைக்க வில்லை. வாங்கிய கடன் இவ்வாறு இருக்க கடந்த நிதியாண்டில் (2025–26) வட்டிக்கான செலவு மட்டும் ரூ.67,050 கோடியாக அதிகரித்துள்ளது. அதாவது, ஒவ்வொரு நாளும் ரூ.184 கோடியை வட்டிக்காக மட்டும் ஒதுக்க வேண்டியுள்ளது.

**கட்டாய செலவு 64.4 சதவீதம்**

மாநிலத்தின் கடன் அளவு, மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் 28.3 சவீதமாக உள்ளது. அதாவது, அபாய கட்டத்தில் இருப்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. அரசு ஊழியர்களின் சம்பளம், ஒய்வூதியம், வாங்கிய கடனுக்கு வட்டி என கட்டாய செலவு மட்டும் 64.4 சதவீதமாக உள்ளது.

அதாவது, அரசுக்கு ரூ.100 வரவு என்றால், அதில் கட்டாய செலவுக்கு மட்டும் ரூ.64.40 சென்றுவிடுகிறது. மீதியுள்ள ரூ.35.60–ஐ வைத்துக்கொண்டுதான் வளர்ச்சி பணிகள் உள்ளிட்டவைகளை கவனிக்க வேண்டியுள்ளது. இது எப்படி சாத்தியமாகும்.

**ஆண்டுக்கு ரூ.1 லட்சம் கோடி கடன்**

தற்போதைய நிலையில், ஆண்டுக்கு ரூ.1 லட்சம் கோடி கடன் வாங்க வேண்டிய சூழல் தமிழக அரசுக்கு இருக்கிறது. இதே நிலை தொடர்ந்தால், அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் கடன் அளவு ரூ.20 லட்சம் கோடியை எட்டும் நிலை ஏற்படும். எனவே, புதிதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு, துறைகள் தோறும் சீர்திருத்தம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மொத்தம் 55 துறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு துறைகளை கவனிக்கவும் அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் மூலம் துறையின் வரவு – செலவு களை ஆராய வேண்டும். தேவையில்லாத செலவி னங்களை தடுக்க வேண்டும்.

**கடனில் மின்துறை முதலிடம்**

அதிக அளவு கடனில் தத்தளிப்பதில் மின் துறைதான் முதலிடத்தில் உள்ளது. மின் துறை கடன் மட்டும் ரூ.2.47 லட்சம் கோடியாக உள்ளது. மாநில அரசின் மொத்த உத்தரவாத கடனில் மின் துறைக்கு 79 சதவீதம் வழங்கப்படுகிறது. போக்குவரத்து துறையும் ரூ.72,667 கோடி இழப்பை சந்தித்து வருகிறது.

த.வெ.க. அரசு பொறுப்பே ற்றவுடன் டாஸ்மாக் நிறுவனத்தில் செய்த மாற்றங்கள் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.1,200 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோல், மின் துறை, போக்குவரத்து துறை உள்பட ஒவ்வொரு துறையிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வந்து செலவை குறைத்து, வருவாயை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.


**கடன் எனும் கடலில் தமிழகம் எனும் கப்பல்**

தற்போதைய நிலையில், கடன் எனும் கடலில், தமிழகம் எனும் கப்பல் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. துறைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கப்பலில் 55 ஒட்டைகள் இருக்கின்றன. இந்த துளைகள் வழியாக கடன் எனும் தண்ணீர் கப்பலின் உள்ளே சென்று கொண்டிருக்கிறது. இது தொடர்ந்து அதிகரித்தால், கப்பல் மூழ்கும் நிலை ஏற்படும். எனவே, துறைகள் தோறும் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் ஒவ்வொரு துளைகளையும் அடைத்து, நிதிச்சுமையில் இருந்து விடுவித்து, கப்பலின் உள்ளே தேங்கிய நீரையும் வெளியேற்றினால், கடன் எனும் கடலில் இருந்து மீண்டு, தமிழகம் எனும் கப்பல் கரைசேரும். ஆனால், குறுகிய காலத்தில் இது நடந்துவிடாது.

**திட்டமிட்டு செயல்பட வேண்டும்**

எனவே, அதற்கு ஏற்ற வகையில் த.வெ.க. அரசு திட்டமிட்டு, தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் குறிப்பிட்ட காலம் தள்ளிவைத்து, நிதி மேலாண்மையை கையாள வேண்டும் என்பதே பொருளாதார நிபுணர்களின் கோரிக்கையாக உள்ளது.

# பூஜை பொருட்கள் விற்பனை கடைகளில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் கட்டாயம்!



சென்னை, ஜூன். 17–

கோயில் வளாகங்களில் உள்ள கடைகளில் பூஜைப் பொருள்களின் விலை பட்டியலை காட்சிப்படுத்துவது கட்டாயம் என்று தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் உத்தர விட்டுள்ளார். இதுதொடர்பாக அனைத்து கோவில் நிர்வாகத்துக்கும் அனுப்பப்பட்ட சுற்றிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

அனைத்து கோவில்களின் வளாகங்களில் இயங்கும் கடைகளிலும் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட பூஜை பொருள்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். சுத்தமான தரமான பொருள்கள் விற்பனை செய்வதை கடைக்காரர்கள் உறுதி செய்ய வேண்டும். பூஜைப் பொருள்களின் விலைப் பட்டியலை பக்தர்களின் பார்வைக்கு காட்சிப்படுத்த வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட எம்.ஆர்.பி. விலையைவிட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யக் கூடாது. பிளாஸ்டிக் பைகளில் பூஜைப் பொருள்களை அடைத்து விற்பனை செய்யக் கூடாது. மஞ்சள் துணிப் பையை மட்டுமே பொருள்களை வழங்க வேண்டும். பக்தர்கள் கேட்காத பொருட்களை வாங்கச் சொல்லி கடைக்காரர்கள் வற்புறுத்தக்கூடாது

கோவிலுக்கு வெளியே வழித்தடங்களை ஆக்கிரமித்து கடைகள் அமைத்து பூஜைப் பொருள்களை விற்பனை செய்யக் கூடாது. கடைகள் சுற்றியும் குப்பைகள் இல்லாமல் தூய்மையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை ஒன் செயலியில் ஒரு ரூபாய்க்கு சலுகை டிக்கெட்!




சென்னை, ஜூன். 17–

சென்னை ஒன் செயலியில் ஒரு ரூபாய்க்கு டிக்கெட் எடுத்து பயணிக்கும் சலுகையை சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம் (கும்டா) வழங்கி உள்ளது. இது குறித்து கும்டா அதிகாரி ஒருவர் கூறும்போது, 'CUMTA UPI மூலம் டிக்கெட் எடுத்து பயணிக்கும் பயணிகளுக்கு முதல் பயண டிக்கெட் மட்டும் ரூ.1–க்கு சலுகையாக வழங்கப்படுகிறது'' என்றார்.

# விவாகரத்து வழக்குகளில் பெயர் விவரங்களை வெளியிடக் கூடாது...!



மதுரை, ஜூன். 17–

கணவன், மனைவி விவாகரத்து வழக்கில் குடும்ப நல கோர்ட்டு பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக்கோரி மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதிகள் ஆனந்த்வெங்கடேஷ், ராமகிருஷ்ணன் ஆகியோர் பிறப்பித்த உத்தரவு வருமாறு:– திருமண வாழ்வில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளால் சகிப்புத்தன்மை இன்மையும், திருமண உறவு முறிவு போன்றவை அதிகரிக்கிறது. தனிக்குடும்பம் என்ற கருத்தாக்கம் சிதைந்து வருவது திருமண வாழ்க்கை சீராக செல்வதற்கு பெரும் தடை ஏற்பட்டு உள்ளது. இதனால் கணவன், மனைவிக்கு இடையே அன்றாட வாழ்வில் மன அழுத்தம் வெளிப்படுகிறது.

திருமணத்திற்கு பிறகு கணவன்–மனைவிக்கு இடையே பகிரப்படும் அன்பு, உணர்வுப்பூர்வமான நெருக்கம் மற்றும் அந்தரங்கமான உறவு ஆகியவை மனித உணர்ச்சிகளின் இயல்பான வெளிப்பாடுகளாகும். இவை வாழ்க்கையில் ஆழ்ந்த மன அமைதியையும், புத்துணர்வையும் அளிக்கின்றன. இத்தகைய தோழமை, உணர்வுப்பூர்வ மான விரக்தி அல்லது உளவியல் ரீதியான துன்பத்துடன் போராடுவோரின் உயிர் காக்கும் ஆதரவாக மாறுகிறது.

மனநோய் குறித்த கடுமையான குற்றச்சாட்டுகளுடன் கூடிய திருமண வழக்குகள் அதிகரித்து உள்ளன. இந்த நிலையில் வழக்கு விசாரணையின்போது சம்பந்தப்பட்டவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவது கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும். குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் அடையாளத்தை பொது வெளியில் வெளிப்படுத்துவது சமூகத்திற்கு ஒரு சாபக்கேடாக அமையும். இதை தவிர்க்க வேண்டும்.

இதனால் வழக்கின் தீர்ப்புகள், உத்தரவுகள், மனுக்கள் அல்லது கோர்ட்டு பதிவேடுகளில் வழக்கில் தொடர்புடையவர்களை எக்ஸ் மற்றும் ஒய் என்றோ அல்லது வழக்கின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அடையாளம் மறைக்கப்பட்ட பிற பெயர்களில்தான் விவரிக்கப்பட வேண்டும்.

எனவே திருமண வழக்குகளை விசாரிக்கும் அனைத்து கோர்ட்டுகளும் கடுமையான மனநல கோளாறுகள் மற்றும் மனநோய் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலான வழக்குகளில் சம்பந்தப்பட்ட தரப்பினரின் பெயர்கள் உள்ளிட்ட அனைத்து அடையாளத்தை மறைத்து வேறுவகையில் குறிப்பிட வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.



# 'நவபஞ்சம ராஜ யோகம்' இவர்களுக்கு மங்கள பலன்கள்!




ஏகாதசி விரதங்களிலேயே மிகவும் புனிதமானதாகக் கருதப்படும் 'நிர்ஜல ஏகாதசி' விரதம் இந்த ஆண்டு ஜூன் 25 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த விரதம் மிகவும் கடுமையான விதிமுறைகளுடன் கடைப்பிடிக்கப்படுகிறது; நாள் முழுவதும் தண்ணீர் கூட அருந்தாமல் விரதம் இருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

விஷ்ணு பகவானுக்கு உகந்ததாக கருதப்படும் இந்நாளில், பக்தர்கள் சிறப்பு பூஜைகள் மற்றும் பிரார்த்தனைகளை மேற்கொள்கின்றனர். இருப்பினும், 2026–ஆம் ஆண்டின் நிர்ஜல ஏகாதசி ஜோதிட ரீதியாகச் சிறப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. சனி மற்றும் சுக்கிரனின் சாதகமான அமைப்பால் இந்நாளில் 'நவபஞ்சம ராஜ யோகம்' உருவாகும் என்று ஜோதிட நிபுணர்கள் கூறுகின்றனர். இந்த இரு நட்பு கிரகங்களின் தாக்கத்தால் சில ராசிக்காரர்களுக்கு மங்களகரமான பலன்கள் கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

**ரிஷபம் :** நவபஞ்சம ராஜ யோகத்தின் தாக்கத்தால், ரிஷப ராசிக்காரர்கள் தங்கள் தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம். நீண்ட காலமாகத் தேங்கியிருந்த பணிகள் மீண்டும் வேகம் பெறக்கூடும். தொழில் விரிவாக்கத்திற்கான சாதகமான சூழல் உருவாகலாம். பூர்வீகச் சொத்து அல்லது குடும்பம் சார்ந்த விஷயங்களில் நல்ல பலன்கள் கிடைக்கலாம். சமூகத்தில் மதிப்பும் அங்கீகாரமும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**மிதுனம் :** இந்த ராசிக்காரர்களின் நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. திடீர் பண வரவு அல்லது கூடுதல் வருமான ஆதாரங்கள் கிடைக்கலாம். தொழில் ரீதியான பயணங்கள் லாபகரமாக அமையும் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. குடும்பத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகள் குறைந்து, உறவுகள் வலுப்படலாம். புதிய வாய்ப்புகள் வாழ்க்கையில் உற்சாகத்தை அளிக்கக்கூடும்.

**கன்னி :** இந்த ராஜ யோகம் கன்னி ராசிக்காரர்களுக்கு முதலீடுகள் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன்களைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலத்தில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து லாபம் கிடைக்கலாம். பணியாளர்களுக்குப் பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலதிகாரிகளிடமிருந்து பாராட்டும் ஆதரவும் கிடைக்கலாம். தொழில் வாழ்க்கையில் முன்னேற்றத்தை நோக்கிய ஒரு படியை எடுத்து வைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**கும்பம் :** சனி பகவான் இந்த ராசியின் அதிபதியாக இருப்பதால், இந்த ராஜ யோகம் சிறப்புப் பலன்களைத் தரும் என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர். தன்னம்பிக்கை அதிகரிக்கும் மற்றும் புதிய பணிகளைத் தொடங்குவதற்கான தைரியம் பிறக்கும். தொழில் துறையில் புதிய திட்டங்கள் வெற்றிபெற வாய்ப்புள்ளது. மன அழுத்தம் குறைந்து அமைதி அதிகரிக்கலாம். உடல்நலம் சார்ந்த விஷயங்களிலும் நிவாரணம் கிடைப்பதற்கான அறிகுறிகள் உள்ளன.

## செந்தூர் விரைவு ரயிலில்

# பெட்டிகளின் எண்ணிக்கை 23 ஆக உயர்வு: தினசரி 350 பயணிகள் கூடுதலாக பயணிக்க வாய்ப்பு!




சென்னை, ஜூன். 17–

தற்போது தெற்கு ரயில்வே நிர்வாகம் பயணிகளின் நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, இதுநாள் வரை மொத்தம் 18 பெட்டிகளுடன் இயங்கி வந்த செந்தூர் எக்ஸ்பிரஸ் ரயிலில், இனி கூடுதலாக 5 பெட்டிகள் இணைக்கப்பட்டு மொத்தம் 23 பெட்டிகளுடன் இயக்கப்பட உள்ளது.

இந்த கூடுதல் பெட்டிகளின் சேர்க்கையில் ஒரு இரண்டாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட பெட்டி (2–tier AC), இரண்டு மூன்றாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட பெட்டிகள் (3–tier AC) மற்றும் இரண்டு படுக்கை வசதி கொண்ட பெட்டிகள் (Sleeper) இடம்பெறுகின்றன. இந்த புதிய மாற்றத்தின் மூலம் நாள்தோறும் 350–க்கும் மேற்பட்ட பயணிகள் கூடுதலாகப் பயணிப்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இருக்கை வசதி மேம்பாட்டின் காரணமாக, அதிகமான பொதுமக்கள் எளிதாக முன்பதிவு செய்து பயணிக்க முடியும் என்று ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.




## குறைவாக சாப்பிட்டாலும் உங்கள் எடை அதிகரிக்கிறதா?




பலர் உடல் எடையைக் குறைக்கும் நோக்கில் டயட் (diet) மேற்கொண்டு மிகக் குறைந்த அளவே உணவை உட்கொள்கிறார்கள். இருப்பினும், தங்கள் எடை குறையாமல் இருப்பதையோ அல்லது அதிகரிப்பதையோ கண்டு குழப்பமடைகிறார்கள். உண்மையில், அதிகளவு உணவை உண்பதால் மட்டுமே எடை அதிகரிப்பதில்லை. உடலில் ஏற்படும் மாற்றங்கள், ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வாழ்க்கை முறை தவறுகளே இதற்குக் முக்கிய காரணங்கள் என்று பிரபல ஊட்டச்சத்து நிபுணர் சுவாதி விளக்குகிறார். இப்போது, குறைவாகச் சாப்பிட்டாலும் எடை அதிகரிக்கக் காரணமான முக்கிய விஷயங்களைப் பார்ப்போம்.

**ஹார்மோன் சமநிலையின்மை :** நாம் எவ்வளவு குறைவாகச் சாப்பிட்டாலும், உடலில் உள்ள ஹார்மோன்கள் சரியாகச் செயல்படாதபோது உடல் எடையைக் கட்டுப்படுத்துவது கடினமாகிறது. பெண்களுக்கு தைராய்டு பிரச்சினைகள் அல்லது PCOS (பாலிசிஸ்டிக் ஓவரி சிண்ட்ரோம்) போன்ற கோளாறுகள் இருக்கும்போது உடல் எடை வேகமாக அதிகரிக்கிறது என்று சுவாதி கூறுகிறார்.

**தூக்கமின்மை மன அழுத்தம் :** பகலில் சரியாகத் தூங்காதவர்களின் ஹார்மோன் அமைப்பு பாதிக்கப்படுகிறது. இது வளர்சிதை மாற்ற விகிதத்தைக் (metabolic rate) குறைத்து, உடல் எடை அதிகரிக்கக் காரணமாகிறது. அதிக மன அழுத்தத்திற்கு ஆளாகும்போது, உடலில் 'கார்டிசோல்' (cortisol) எனும் ஹார்மோன் வெளியாகிறது. இது உடலில் கொழுப்பு சேர்வதை அதிகரிக்கிறது.

**உடல் உழைப்பு இன்மை, வயது முதிர்வு :** நாள் முழுவதும் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பது, குறைந்த அளவிலான உடல் உழைப்பு அல்லது உடற்பயிற்சி செய்யாமை போன்றவை உடலில் உள்ள கலோரிகளை எரிப்பதில்லை. வயது ஏறும்போது, உடலின் வளர்சிதை மாற்றம் இயற்கையாகவே மெதுவடைகிறது. அதாவது, நாம் குறைவாகச் சாப்பிட்டாலும், அந்த உணவு கொழுப்பாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று சுவாதி குறிப்பிடுகிறார்.

**குறைந்த அளவு அதிக கலோரிகள் :** நாம் உண்ணும் உணவின் அளவு குறைவாக இருந்தாலும், அதில் உள்ள கலோரி அளவை அறிந்துகொள்வது மிக முக்கியம். சிறிய அளவில் இருக்கும் துரித உணவுகள் (fast foods) அல்லது சிற்றுண்டிகளில் கூட கலோரிகள், சர்க்கரை மற்றும் கொழுப்பு ஆகியவை மிக அதிகமாக இருக்கலாம். இவை உங்களுக்குத் தெரியாமலேயே உங்கள் உடல் எடையை அதிகரிக்கக்கூடும்.

**உணவைத் தவிர்த்தல் :** உடல் எடையைக் குறைக்கப் பலர் காலை உணவையோ அல்லது மதிய உணவையோ தவிர்த்துவிடுகிறார்கள். ஒரு வேளை உணவை முழுமையாகத் தவிர்ப்பதால், பசியைத் தாங்க முடியாமல் நாளின் மற்ற நேரங்களில் ஒரே நேரத்தில் அதிகமாகச் சாப்பிடும் நிலை ஏற்படுகிறது. இத்தகைய தவறான பழக்கம் உங்கள் உடல் எடை மேலாண்மையை முற்றிலுமாகப் பாதிக்கும் என்று ஊட்டச்சத்து நிபுணர் சுவாதி எச்சரிக்கிறார். இதனுடன், சில வகையான மருந்துகளைப் பயன்படுத்துவதாலும் உடல் எடை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**நிபுணர்களின் முக்கிய அறிவுரை**

உடல் எடையைக் குறைப்பது என்பது உணவின் அளவைக் குறைப்பது மட்டுமல்ல. உணவுமுறை நிபுணர் சுவாதி, நாம் உண்ணும் உணவின் தரம், உணவு உட்கொள்ளும் நேரம், அன்றாட உடற்பயிற்சி மற்றும் போதுமான தூக்கம் போன்ற நமது ஒட்டுமொத்த வாழ்க்கை முறையையும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கிறார்.

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்ட பிறகும், மிகக் குறைவாகவே சாப்பிட்டாலும் உங்கள் உடல் எடை அதிகரித்துக் கொண்டே இருந்தால், தாமதிக்காமல் ஒரு மருத்துவர் அல்லது மருத்துவ உணவுமுறை நிபுணரை (clinical dietitian) அணுகுவது சிறந்தது. அவர்கள் உங்கள் உடல்நிலை, உணவுப் பழக்கம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றை முழுமையாகப் பரிசோதித்து, இதற்கான அடிப்படை மருத்துவக் காரணத்தைக் கண்டறிந்து, உங்களுக்குச் சரியான தீர்வை வழங்குவார்கள்.



இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற 1435–ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)யில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா. சிவகுரு பிரபாகரன் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார் . அதனைத் தொடர்ந்து இறப்பு நிவாரண தொகை பெறுவதற்கான ஆணையினை பயனாளிக்கு வழங்கினார். கீழக்கரை வட்டாட்சியர் ராம சுப்பிரமணியன் மண்டல துணை வட்டாட்சியர் முத்துராமலிங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

# அரசு ஊழியர்களுக்கு 24 மாத சம்பளம்?




புதுடெல்லி, ஜூன். 17–

8–வது ஊதியக் குழு அமைக்கப்பட்டதிலிருந்து, நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான மத்திய அரசு ஊழியர்களும் ஓய்வூதியதாரர்களும் புதிய ஊதியம், படிகள், ஃபிட்மெண்ட் காரணி (fitment factor) மற்றும் நிலுவைத் தொகைகள் ஆகியவற்றிற்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்ட பிறகு ஊழியர்களின் ஊதியத்தில் குறிப்பிடத்தக்க உயர்வு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், முந்தைய மாதங்கள் அல்லது ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகைகள் ஊழியர்களின் கணக்குகளில் ஒரே நேரத்தில் வரவு வைக்கப்பட வாய்ப்புள்ளதால், இது ஒரு பெரிய நிதி நன்மையாகக் கருதப்படுகிறது. இருப்பினும், இவ்வளவு பெரிய தொகையால் ஏற்படும் வரி தொடர்பான தாக்கங்களை ஊழியர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நிதி நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

8–வது ஊதியக் குழுவைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டால், ஊழியர்கள் 20 முதல் 24 மாதங்களுக்கான நிலுவைத் தொகையை ஒரே நேரத்தில் பெற வேண்டிய சூழல் ஏற்படலாம். இந்த நிலுவைத் தொகைகள் வழக்கமான ஆண்டு வருமானத்துடன் கூடுதலாகச் சேர்க்கப்படுவதால், அந்த நிதியாண்டிற்கான மொத்த வருமானம் கணிசமாக அதிகரிக்கும். இதன் விளைவாக, பல ஊழியர்கள் அறியாமலேயே அதிக வருமான வரி வரம்பிற்குள் (tax slab) செல்லக்கூடும்.

இதனால், நிலுவைத் தொகையாகப் பெறப்பட்ட பணத்தின் ஒரு பகுதியை கூடுதல் வரியாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம்.


ஏன் 24 மாதங்கள் வரையிலான நிலுவைத் தொகை ஒரே நேரத்தில் கிடைக்க வாய்ப்புள்ளது? 8–வது ஊதியக் குழு நவம்பர் 2025–ல் அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் ஜனவரி 1, 2026 முதல் நடைமுறைக்கு வரவிருந்தாலும், குழுவின் அறிக்கை சமர்ப்பிப்பு, அரசின் பரிசீலனை மற்றும் ஒப்புதல் செயல்முறை போன்ற நிலைகளை முடிக்க கூடுதல் காலம் தேவைப்படலாம். பல நிபுணர்களின் கருத்துப்படி, முழுமையான அமலாக்கம் 2027–ல் நடைபெற வாய்ப்புள்ளது. அவ்வாறு நடந்தால், அமலாக்கத்திற்கு முந்தைய சுமார் இரண்டு ஆண்டுகளுக்கான ஊதிய வித்தியாசம் ஊழியர்களுக்கு நிலுவைத் தொகையாக வழங்கப்படும்.

இவ்வளவு பெரிய தொகையை ஒரே நேரத்தில் பெறுவது வரிச் சுமையை அதிகரிக்கக்கூடும் என்ற கவலைகள் இருந்தாலும், ஊழியர்களுக்கு நிவாரணம் அளிக்க வருமான வரிச் சட்டத்தில் ஒரு சிறப்பு ஏற்பாடு உள்ளது. அதுதான் பிரிவு 89(1). இந்த ஏற்பாட்டின்படி, முந்தைய ஆண்டுகளுக்கான ஊதிய நிலுவைத் தொகையை ஒரே நேரத்தில் பெறுவதால் ஊழியர்கள் தேவையற்ற அதிக வரியைச் செலுத்துவதிலிருந்து அரசு பாதுகாக்கிறது.

அதாவது, நிலுவைத் தொகை பெறப்பட்ட ஆண்டில் உள்ள மொத்த வருமானத்தை மட்டும் கருத்தில் கொண்டு அதிக வரி விதிப்பதற்குப் பதிலாக, அந்தத் தொகை எந்தெந்த ஆண்டுகளுக்கு உரியதோ, அந்த ஆண்டுகளின் அடிப்படையில் வரித் தாக்கத்தைக் கணக்கிடுவதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது. பிரிவு 89(1)–ன் கீழ் கிடைக்கும் இந்த வரிச் சலுகையின் மூலம் ஊழியர்கள் பெரிதும் பயனடையலாம். நிலுவைத் தொகை (arrears) பெறப்பட்ட ஆண்டில் வரியைக் கணக்கிட்ட பிறகு, அதே தொகை தொடர்புடைய முந்தைய ஆண்டுகளுக்குப் பிரித்து ஒதுக்கப்பட்டு, வரி மீண்டும் கணக்கிடப்படுகிறது. இவ்விரு கணக்கீடுகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் ஊழியருக்குக் கூடுதல் வரிச் சுமையை ஏற்படுத்துவதாக அமைந்தால், அதற்கேற்ப வரிச் சலுகை வழங்கப்படுகிறது. ஒரே நேரத்தில் பெறப்படும் நிலுவைத் தொகையால் ஏற்படும் அதிகப்படியான வரிச் சுமையின் தாக்கத்தை இது பெருமளவு குறைக்க உதவும். இருப்பினும், இந்தச் சலுகையைப் பெற ஊழியர்கள் சில முக்கிய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். மிக முக்கியமாக, வருமான வரி கணக்கைத் (ITR) தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே, 'படிவம் 10E'–ஐ (Form 10E) இணையவழியில் சமர்ப்பிக்க வேண்டும். இந்தப் படிவத்தில் நிலுவைத் தொகை குறித்த முழு விவரங்களையும் குறிப்பிட வேண்டும். படிவம் 10E–ஐச் சமர்ப்பிக்காமல் பிரிவு 89(1)–ன் கீழ் வரி விலக்கு அல்லது சலுகை கோரப்பட்டால், வருமான வரித் துறை அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளாது.

எனவே, 8–வது ஊதியக் குழுவின் அமலாக்கத்திற்குப் பிறகு கணிசமான அளவு நிலுவைத் தொகையைப் பெறவுள்ள மத்திய அரசு ஊழியர்களும் ஓய்வூதியதாரர்களும், ஊதிய உயர்வு குறித்து மட்டுமல்லாமல், வரித் திட்டமிடல் குறித்தும் முன்கூட்டியே விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். வரிச் சலுகையைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால், நிலுவைத் தொகை மூலம் கிடைக்கும் நிதிப் பலனை இன்னும் சிறப்பாகப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

## உலகக்கோப்பை கால்பந்து: மெஸ்ஸி 200-வது போட்டியில் உலக சாதனை!



உலகமே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த 2026 உலகக்கோப்பை கால்பந்து திருவிழா கன்சாஸ் நகரில் பிரம்மாண்டமாகத் தொடங்கியுள்ளது. இதில் அல்ஜீரியாவுக்கு எதிரான அர்ஜெண்டினாவின் தொடக்க ஆட்டத்தில், நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி தனது 200வது சர்வதேச போட்டியில் களம் கண்டு, உலகக்கோப்பை வரலாற்றில் தனது முதல் ஹாட்ரிக் கோலை அடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

## இரத்ததானம் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்!

ஒட்டன்சத்திரம், ஜூன். 17–

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை நாட்டு நலப்பணி திட்டம் திண்டுக்கல் மாவட்டம், மற்றும் இந்திய மருத்துவக்கழகம் ஒட்டன்சத்திரம் சார்பாக ஒட்டன்சத்திரம் கே.ஆர்.அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் இரத்ததானம் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம், வினாடி வினா போட்டி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியை மணிமொழி தலைமை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் காளிமுத்து முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் பி. சரவணக்குமார் வரவேற்றுப்பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை முன்னாள் தலைமை மருத்துவர் டாக்டர் ஏ. ஆசைத்தம்பி கலந்துகொண்டு விழிப்புணர்வு கருத்துக்களை விளக்கி கூறினார். இதில் வினாடி வினா போட்டிகள் நடத்தி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது. முடிவில் பள்ளியின் வேதியியல் முதுகலை ஆசிரியர் ராஜூ நன்றி கூறினார். இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை கணித முதுகலை ஆசிரியர் சரவணவேல், என்.சி.சி அலுவலர் பால்பாண்டி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

## அடிப்படை வசதிகள் இன்றி அவதிப்படும் மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு!

ராமநாதபுரம், ஜூன். 17–

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகாவிற்கு உட்பட்ட தேவிபட்டினம் அருகே உள்ள சக்கரவாள நல்லூர் கிராம மக்கள், தங்களது கிராமத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் அடிப்படை வசதி குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கோரி கிராம மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.



அந்த மனுவில், கிராமத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, பேருந்து வசதி, தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் உள்ளிட்ட அத்தியாவசிய அடிப்படை தேவைகள் போதுமான அளவில் இல்லாததால் பொதுமக்கள் நாள்தோறும் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மாணவர்கள், முதியவர்கள் மற்றும் பெண்கள் போக்குவரத்து வசதி இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும், மழைக்காலங்களில் சாலை மற்றும் வடிகால் வசதி இல்லாத காரணத்தால் கிராம மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர் .

அதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஆட்சியர் மக்களின் குறைகளை நேரில் கவனித்து உடனடி நடவடிக்கை எடுத்து, சக்கரவாள நல்லூர் கிராமத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருவார் என்ற நம்பிக்கையுடன் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்ததாக தெரிவித்தனர்.


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881




# வேலை வாய்ப்பு

## சொசைட்டி ஃபார் அப்ளைட் மைக்ரோவேவ் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் & ரிசர்ச் (SAMEER) நிறுவனத்தில் 12 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: Society for Applied Microwave Electronics Engineering & Research (SAMEER)
அறிவிப்பு எண்: S–CEM/ESTT/PE–PTA/02/2026
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்
மொத்த காலிப்பணியிடங்கள்: 12 (Project Engineer மற்றும் Project Technical Assistant (A) பணியிடங்கள்)
பணியிடம்: சென்னை
நேர்காணல் தேதி: Project Engineer பணிக்கு 01.07.2026 & 02.07.2026; Project Technical Assistant பணிக்கு 01.07.2026
விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://sameer.gov.in/

## இந்திய அறிவியல் கழகம் (IISc) நிறுவனத்தில் 34 காலிப்பணியிடங்கள்!





நிறுவனத்தின் பெயர்: இந்திய அறிவியல் நிறுவனம் (Indian Institute of Science)
அறிவிப்பு எண்: R(HR)/Recruitment–2/2026 (தேதி: 29 மே 2026)
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி முறை: நிரந்தரப் பணி
மொத்தக் காலிப்பணியிடங்கள்: 34 நிர்வாக உதவியாளர் (Administrative Assistant) பணியிடங்கள்
பணியிடம்: பெங்களூரு
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 29.05.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 18.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://iisc.ac.in/

## மத்திய மின்னணு பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (CEERI) நிறுவனத்தில் 22 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: CEERI மத்திய மின்னணுவியல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (Central Electronics Engineering Research Institute)
அறிவிப்பு எண்: 01/2026 (தேதி: 21.05.2026)
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி அமைப்பு: நிரந்தரப் பணி
மொத்தக் காலிப்பணியிடங்கள்: 22 [தொழில்நுட்பவியலாளர் (1) [Group–II (1)], தொழில்நுட்ப அதிகாரி [Group–III (3)] பணியிடங்கள்]
பணிபுரியும் இடம்: சென்னை (தமிழ்நாடு), ஜெய்ப்பூர் (ராஜஸ்தான்), பிலானி (ராஜஸ்தான்)
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 21.05.2026 அன்று காலை 10.00 மணி
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 20.06.2026 அன்று இரவு 11.59 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.ceeri.res.in/

## அமராவதிநகர் சைனிக் பள்ளி 2026 வேலைவாய்ப்பு அறிவிப்பு!




நிறுவனத்தின் பெயர்: சைனிக் பள்ளி அமராவதிநகர்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி முறை: நிரந்தரப் பணி
மொத்தக் காலிப்பணியிடங்கள்: 03 (மெஸ் மேலாளர், மருத்துவ அதிகாரி, கீழ்நிலை எழுத்தர் – LDC)
பணியிடம்: அமராவதிநகர், திருப்பூர் மாவட்டம்
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 06.06.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 30.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.sainikschoolamaravathinagar.edu.in/careers.php

## கோல் இந்தியா லிமிடெட் நிறுவனத்தில் 660 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: கோல் இந்தியா லிமிடெட் (Coal India Limited)
அறிவிப்பு எண்: 03/2026
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி அமைப்பு: நிரந்தரப் பணி
மொத்தக் காலிப் பணியிடங்கள்: 660 (E–1 கிரேடு மேலாண்மைப் பயிற்சிப் பணியிடங்கள் – MT)
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 12.05.2026 அன்று காலை 10.00 மணி
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 21.06.2026 அன்று மாலை 06.00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.coalindia.in/

## டிஆர்டிஓ ஆட்சேர்ப்பு மைய வேலைவாய்ப்புகள்!




நிறுவனத்தின் பெயர்: DRDO RAC ஆட்சேர்ப்பு மற்றும் மதிப்பீட்டு மையம் (Recruitment & Assessment Centre)
அறிவிப்பு எண்: 157
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி அமைப்பு: நிரந்தரப் பணி
மொத்தக் காலிப்பணியிடங்கள்: 33 (Scientist E, Scientist D மற்றும் Scientist C பதவிகள்)
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 03.06.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 19.06.2026, மாலை 04:00 மணி வரை
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://rac.gov.in/

## இன்றைய கார்ட்டூன்




# பிரிக்ஸ் உச்சி மாநாடு: ஐக்கிய அரபு அமீரக அதிபருக்கு பிரதமர் மோடி அழைப்பு!

பிரான்ஸ், ஜூன். 17–

பிரான்ஸ் நாட்டின் எவியன் நகரில் ஜி7 உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக பிரதமர் நரேந்திர மோடியும் பங்கேற்றார்.

இதன் ஒரு பகுதியாக, பிரதமர் நரேந்திர மோடியும், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானும் சந்தித்தனர்.

இந்நிலையில் இந்த ஆண்டு இறுதியில் இந்தியா நடத்தவிருக்கும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.




மேலும் இந்த ஆண்டில் இரு தலைவர்களுக்கும் இடையே நடைபெறும் மூன்றாவது சந்திப்பு இதுவாகும்.

இது இந்தியா–ஐக்கிய அரபு அமீரக விரிவான மூலோபாய கூட்டாண்மையின் வலிமையைப் பிரதிபலிக்கிறது.

முன்னதாக கடந்த ஜனவரியில் ஷேக் முகமது பின் சயீத் இந்தியாவுக்கும், மே மாதம் மோடி ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் பயணங்கள் மேற்கொண்டனர்.

மேலும் தொழில்நுட்பம், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை இருவரும் ஆய்வு செய்தனர்.

## சினிமா துளிகள்..!

### நடிகை கவுதமி புகார் - சென்னை, மதுரையில் அமலாக்கத்துறை சோதனை..!



நடிகை கவுதமியின் ரூ.25 கோடி மதிப்பிலான சொத்துகள் மோசடி செய்யப்பட்ட விவகாரத்தில், சென்னை, மதுரையில் 7 இடங்களில் இன்று (ஜூன் 17) அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இது தொடர்பாக கவுதமி அளித்த புகாரின் பேரில் அழகப்பன், சுகுமார், ரகுநாதன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. இந்த வழக்கில் இன்று (ஜூன் 17) சென்னை, மதுரை உள்ளிட்ட 7 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

சென்னையில் அண்ணா நகர், வானகரம் உள்ளிட்ட 3 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். பணபரிமாற்ற மோசடி குறித்த புகாரின் அடிப்படையில் சோதனை நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 2025-26ஆம் ஆண்டில் இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி ரூ. 1.78 லட்சம் கோடியாக உயர்வு- அமைச்சர் ராஜ்நாத் சிங்!

புதுடெல்லி, ஜூன். 17–

இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் புதிய உச்சங்களை எட்டி வருகிறது. இதுகுறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது எக்ஸ் தளத்தில் கூறியதாவது:–



* 2025–2026 நிதியாண்டில் இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி, ரூ.1.78 லட்சம் கோடியாக வரலாறு காணாத உச்சத்தை எட்டியுள்ளது.

* மேலும் முந்தைய நிதியாண்டின் உற்பத்தியான ரூ.1.54 லட்சம் கோடியை விட 15.6 சதவீதம் வளர்ச்சியை குறிக்கிறது.

* மேலும் 2020–2021–ல் ரூ.84,643 கோடியாக இருந்ததை விட தற்போதைய உற்பத்தி எண்ணிக்கை 110 சதவீதம் அதிகரித்துள்ளது.

* 2013–2014 நிதியாண்டில் ரூ. 43,746 கோடியாக இருந்த உள்நாட்டு பாதுகாப்பு உற்பத்தி, தற்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

* மேலும் 2025–2026 ஆம் ஆண்டில் தனியார் துறையின் பங்கும் சுமார் ரூ. 42,000 கோடியாக, இதுவரை இல்லாத உச்சத்தை எட்டியது.

* சமீபத்திய ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தியில் ஏற்பட்டுள்ள இந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சி, பாதுகாப்பு உற்பத்தித் துறை மற்றும் பிற அனைத்துத் தரப்பினரின் கூட்டு முயற்சிகளின் விளைவாகும். * இந்த வளர்ச்சிப் பாதை, நாட்டின் விரிவடைந்து வரும் பாதுகாப்புத் தொழில் தளத்தின் தெளிவான அறிகுறியாகும் என்று கூறினார்.

# இடைத்தேர்தல் அறிவிப்புக்கு தடை விதிக்க முடியாது; சென்னை ஐகோர்ட் உத்தரவு!

சென்னை, ஜூன். 17–

இடைத்தேர்தல் அறிவிப்புக்கு தடை விதிக்க முடியாது என சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

அதிமுக எம்எல்ஏக்கள் ஜெயக்குமார், மரகதம் குமரவேல், சத்திய பாமா, இசக்கி சுப்பையா ஆகியோர் ராஜினாமா செய்த 4 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடத்தும் பணிகளை தேர்தல் கமிஷன் தொடங்கியுள்ளது. அதிமுக எம்எல்ஏக்கள் நான்கு பேர் ராஜினாமா செய்த தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்த எதிர்ப்பு தெரிவித்து, அதிமுக சார்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. எம்எல்ஏக்கள் ராஜினாமா விவகாரத்தில், தமிழக சட்டசபை சபாநாயகரின் முடிவு தவறானது என்றும் அதிமுக தரப்பில் வாதிடப்பட்டது. இந்த



வழக்கை விசாரித்த ஐகோர்ட் இடைத்தேர்தல் அறிவிப்புக்கு தடை விதிக்க முடியாது என உத்தரவிட்டது.

# ஜூன் 17-ல் விஜய்யை சந்திக்கும் வைகோ: அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு!



சென்னை, ஜூன். 17–

தமிழக அரசியல் களத்தில் முக்கிய நிகழ்வாக, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் Vijay இன்று மதிமுக பொதுச்செயலாளர் Vaikoவை சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சந்திப்பில் எதிர்கால அரசியல் கூட்டணி, சட்டசபைத் தேர்தல் வியூகங்கள் மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து ஆலோசனை நடைபெறலாம் என அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு நிலவி வருகிறது.

# இந்தியாவுக்கு வரும் ஆற்றில் உலகின் மிகப்பெரிய அணையை கட்டும் சீனா!



புதுடில்லி, ஜூன். 17–

இந்திய எல்லையில் உலகிலேயே மிகப்பெரிய அணையை கட்டுவதற்கான பணிகளை சீனா துவங்கியுள்ளது. இதனை மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது.

இந்திய எல்லையிலிருந்து வெறும் 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள திபெத்தின் யார்லங் சாங்போ நதியின் நீர்பாசனப் பகுதியில், உலகிலேயே மிகப்பெரிய அணையைக் கட்டும் பணிகளைச் சீனா அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளது. இந்தியாவின் தொடர் எதிர்ப்புகளையும் மீறி சீனா இத்திட்டத்தை மிக வேகமாக முன்னெடுத்து வருகிறது.

இந்தியாவிற்குள் சியாங் என்ற பெயரில் நுழைந்து, பின்னர் பிரம்மபுத்திராவாக மாறும் இந்த யார்லங் சாங்போ நதியில் சீனா கட்டும் பிரமாண்ட அணையால், இந்திய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, சீனாவின் ஒவ்வொரு அசைவுகளையும் இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

# போலீஸ் விசாரணையில் உயிரிழந்த ஆகாஷ் உடல் தகனம்...!

மதுரை, ஜூன். 17–

மானாமதுரையில் போலீஸார் விசாரணையில் உயிரிழந்த ஆகாஷ் உடல், 100 நாட்களுக்குப் பின்னர் அரசு சார்பில் தகனம் செய்யப்பட்டது.



இதற்காக, மதுரை அரசு மருத்துவமனையின் பிணவறையில் இருந்து ஆகாஷ் உடலை எடுத்து வந்தபோது, போலீஸாருக்கும் – ஆகாஷ் உறவினர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீஸுடன் மோதியதற்காக 50 பேர் கைது செய்யப்பட்டனர். சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்தவர் ஆகாஷ் டெலிசன் (24). அப்பகுதியைச் சேர்ந்த 2 பேரை வெட்டிய வழக்கில், போலீஸார் அவரை கைது செய்தனர். பின்னர் அவரை போலீஸார் தாக்கியதில் அவரது கால் எலும்பு முறிந்ததாகக் கூறி மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால், ஆகாஷ் கடந்த மார்ச் 8–ம் தேதி உயிரிழந்தார்.

அவரது உடல் உயர் நீதிமன்ற உத்தரவின்படி உடற்கூராய்வு செய்யப்பட்டது. இந்த சம்பவத்தில் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிலையில், இதில் தொடர்புடைய போலீஸாரை கைது செய்ய வேண்டும், உரிய இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும், அப்போதுதான் ஆகாஷ் உடலை பெற்றுக் கொள்வோம் என அவரது உறவினர்கள் பல கட்டங்களாக போராட்டம் நடத்தினர்.

இதனால், 100 நாட்களாக அவரின் உடலானது மதுரை அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆகாஷ் உடலை அரசு சார்பில் அடக்கம் அல்லது தகனம் செய்ய தமிழக அரசுக்கு உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது. அதன்படி, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் தலைமையில் பலத்த போலீஸார் பாதுகாப்புடன் ஆகாஷின் உடல் தகனம் செய்வதற்காக அரசு மருத்துவமனையில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்டது.

அப்போது அங்கிருந்த ஆகாஷின் உறவினர்கள், உடலை வெளியே கொண்டவருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், அவர்களுக்கம் காவல்துறையினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதையடுத்து, எதிர்ப்பு தெரிவித்த சுமார் 50 பேரை போலீஸார் கைது செய்தனர். பின்னர், ஆகாஷின் உறவினர்கள் முன்னிலையில், மதுரை தத்தனேரி மின் மயானத்தில் ஆகாஷின் உடல் தகனம் செய்யப்பட்டது.

# அதிமுக எம்எல்ஏ சி.விஜயபாஸ்கர் தவெகவில்?




சென்னை, ஜூன். 17–

அதிமுக எம்எல்ஏ சி.விஜயபாஸ்கர், தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். வரும் 22–ம் தேதி நடைபெறும் முதல்வர் விஜய் பிறந்தநாள் விழாவில் அவர் தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



நாமக்கல் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக செ.கு.சதீஷ்குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# கர்நாடகாவில் மேல்-சபை தேர்தல்: காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ரெசார்ட்டில்..!

பெங்களூரு, ஜூன். 17–

கர்நாடக மேல்–சபையில் மொத்தம் 75 உறுப்பினர் இடங்கள் உள்ளன. இதில் 7 இடங்கள் காலியாகின்றன. இந்த இடங்கள் எம்.எல்.ஏ.க்கள் மூலம் நிரப்பப்படுகின்றன. இந்த 7 இடங்க ளுக்கு ஜூன். 18 (வியாழக்கிழமை) தேர்தல் நடக்கிறது. இந்த 7 இடங்களுக்கு 8 பேர் களத்தில் உள்ளனர். அதாவது ஆளும் காங்கிரஸ் சார்பில் திப்பண்ணப்பா கமக்னூர், பி.கே.ஹரிபிரசாத், பி.வி.மோகன், சிவண்ணா மலவள்ளி, வினய் கார்த்திக் ஆகியோரும், பா.ஜனதா சார்பில் ரகு, லிங்கராஜ் பட்டீல், ஜனதா தளம் (எஸ்) சார்பில் கோவிந்தராஜ் ஆகியோரும் போட்டியிடுகிறார்கள்.

கர்நாடக சட்டசபையில் உள்ள கட்சிகளின் எம்.எல்.ஏ.க்களின் பலத்தின் அடிப்படையில் ஆளும் காங்கிரசுக்கு 4 இடங்களும், பா. ஜனதாவுக்கு 2 இடங்களும் கிடைக்கும். ஒரு இடத்தில் வெற்றி பெற 28 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவை. ஆனால் ஜனதா தளம் (எஸ்) கட்சியிடம் 18 எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே உள்ளனர். பா.ஜனதாவில் இருந்து அக்கட்சிக்கு 4 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. அதுபோக இன்னும் 6 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவை.

தேவையான ஆதரவு இல்லாத நிலையில் காங்கிரஸ் 5–வது வேட்பாளரை நிறுத்தியுள்ளது. 4 வேட்பாளர்களுக்கு தேவைப்படும் எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு போக காங்கிரசிடம் 24 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். அக்கட்சி வெற்றி பெற இன்னும் 4 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவைப்படுகிறது. சுயேச்சை எம்.எல்.ஏ.க்கள் 3 பேரின் ஆதரவு காங்கிரசுக்கு கிடைக்கும். மேலும் பா.ஜனதாவில் இருந்து நீக்கப்பட்ட 2 எம்.எல்.ஏ.க்க ளின் ஆதரவும் காங்கிரசுக்கு கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அதன்படி பார்த்தால் காங்கிரசின் 5–வது வேட்பாளர் வினய் கார்த்திக்கும் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் மேல்–சபை தேர்தலில் தங்களது வேட்பாளரை வெற்றி பெற வைக்க ஜனதாதளம் (எஸ்) கட்சி, காங்கிரசார் இடையே போட்டா போட்டி எழுந்துள்ளது. இதனால் இரு கட்சி தலைவர்களும் எம்.எல்.ஏ.க்களை தொடர்பு கொண்டு பேசி தங்களுக்கு ஆதரவாக இழுக்க முயற்சி நடந்த வருவதாக சொல்லப்படுகிறது. குறிப்பாக மத்திய மந்திரி குமாரசாமி



சுயேச்சை எம்.எல்.ஏ.க்களை தொடர்பு கொண்டு தனது கட்சி வேட்பாளருக்கு ஆதரவை பெற முயற்சி செய்துள்ளார்.

மேலும் சில காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுடனும் அவர் பேசியதாக சொல்லப்படுகிறது. எனவே மேல்–சபை தேர்தலில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கட்சி மாறி ஓட்டுப்போடுவதை தடுக்கவும், குதிரைபேரத்தை தடுக்கவும் ரெசார்ட்டில் அவர்களை தங்க வைக்க முதல்–மந்திரி டி.கே.சிவக்குமார் மேலிட உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதாவது நேற்று மாலை கர்நாடக காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் பெங்களூரு அருகே பிடதியில் உள்ள ஒரு ரெசார்ட்டில் நடைபெற்றது. முதல்–மந்திரி டி.கே.சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் முன்னாள் முதல்–மந்திரி சித்தராமையா மற்றும் மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொண்டனர். இதில் மேல்–சபை தேர்தலில் எவ்வாறு வாக்களிக்க வேண் டும், எந்தெந்த எம்.எல்.ஏ.க்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து தலைவர்கள் அறிவுறுத்தினர். ஒரு வாக்கு கூட செல்லாதவை ஆகிவிடக்கூடாது என்பதால் அனைத்து எம்.எல்.ஏ.க்களும் மிகவும் கவனமாக வாக்களிக்க வேண்டும் என்று தலைவர்கள் அறிவுரை கூறினர். இந்த கூட்டத்தை தொடர்ந்து எம்.எல்.ஏ.க்கள் அதே ரெசார்ட்டில் தங்க வைக்கப்பட்டனர். அவர்கள் நாளை நடைபெறும் தேர்தலில் நேராக ரெசார்ட்டில் இருந்து பஸ்களில் விதானசவு தாவுக்கு வந்து வாக்களிப்பார்கள் என கூறப்படுகிறது. அதுபோல் காங்கிரசார் ஜனதாதளம் (எஸ்) கட்சிகளை இழுக்காமல் இருக்கவும், அக்கட்சி தலைவர்கள் தங்களது எம்.எல்.ஏ.க்களை பத்திரமாக பாதுகாத்து வருவதாகவும் கூறப்படுகிறது.






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020